ஆறு மாத காலத்திற்குள் முழுமையாகச் செலுத்த வேண்டும். இத்திட்டத்தின்மூலம் 98,481 கடன் பெற்றவர்கள் 11.10 கோடி ரூபாய் அளவிற்கு வட்டிச் சலுகையைப் பெறுவார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தற்போது நான் அறிவித்துள்ள பல்வேறு சலுகைகள், கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்றுள்ள விவசாயப் பெருமக்கள், நெசவாளர்கள் மற்றும் ஏனைய அனைத்துத் தரப்பினரின் சுமையை வெகுவாகக் குறைத்து, அவர்கள் தங்களது கடன்களை எளிதில் திருப்பிச் செலுத்த, உற்ற உதவியாக அமையும். அவர்களது தேவை அறிந்து நான் அறிவித்துள்ள இந்தச் சலுகைகளை, அனைத்துத் தரப்பு மக்களும் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள் என்று கூறி அமைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11–50

7. கவன ஈர்ப்பு

(அ) சீர்காழி, வைத்தீஸ்வரன் கோயிலுக்குப் புறவழிச் சாலை அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55–ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. நா. சந்திரமோகன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. நா. சந்திரமோகன்.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன் கோயிலில் புறவழிச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2005 ஏப்ரல் 13] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

அறிக்கை

சட்டமன்ற உறுப்பினர் திரு. நா. சந்திரமோகன் அவர்கள் புறவழிச் சாலை அமைக்கக் கோரும் பகுதியானது கும்பகோணம்–சீர்காழி (மாநில நெடுஞ்சாலை) சாலையில் கி.மீ. 48/2–ல் பிரிந்து அதே சாலையில் கி.மீ. 50/4–ல் சேருகின்ற சாலைப் பகுதியாகும். இப்பகுதியில் அமைந்துள்ள வைத்தீஸ்வரன் கோயில் இந்துக்களின் முக்கிய புண்ணிய தலமாகும். விசேட காலங்களில் மிகுந்த போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, இங்கு புறவழிச் சாலை அமைப்பது அவசியமாகும். சுமார் 6.00 கி.மீ. நீளமுள்ள சாலையினை நில எடுப்பு, பாலம் உட்பட புதிதாக அமைப்பதற்குத் தோராயமாக ரூ.3.00 கோடி தேவைப்படும். தற்போது இப்பணி அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள திட்டம் எதிலும் இடம் பெறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. நா. சந்திரமோகன்.*

திரு. நா. சந்திரமோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன் வைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதில் குறிப்பாக, புறவழிச் சாலை அமைப்பது அவசியம் என்றும், தற்போது இப்பணி அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள திட்டத்தில் ஏதும் இடம் பெறவில்லை என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் உள்ள வைத்தீஸ்வரன் கோயில், மிகவும் பிரசித்தி பெற்ற நவக்கிரக ஸ்தலங்களில் ஒன்றான செவ்வாய் ஸ்தலம் ஆகும். இங்கு அருள்மிகு முத்து குமாரஸ்வாமி, தையல்நாயகி அம்மன், நோய்களையெல்லாம் தீர்த்து வைக்கும் வைத்தியநாத சுவாமி போன்ற திருக்கோயிகள் உள்ளன. ஒவ்வொரு மாதமும் கிருத்திகைத் திருவிழா சிறப்பாக நடைபெறும். இத்திருக்கோயிலுக்கு இந்தியாவில் இருந்தும், பல்வேறு பகுதிகளில் இருந்தும், வெளி நாடுகளிலிருந்தும், சுற்றுலாப் பயணிகளும், பக்தர்களும் அதிக அளவிலே வந்து செல்கின்றனர். சீர்காழியில் இருந்து மயிலாடுதுறை செல்லும் மாநில நெடுஞ்சாலையில் இவ்வூர் அமைந்துள்ளது. இந்தச் சாலை மிகவும் குறுகிய வளைவுகளைக் கொண்ட நெருக்கடியான சாலை ஆகும். (குறுக்கீடுகள்) கேள்வியாகத்தான் வருகிறது. கேள்வியாகத்தான் வருகிறது. இச்சாலையில் தினமும் 8,800 வாகனங்கள் வைத்தீஸ்வரன் கோயிலைக் கடந்து செல்கின்றன. இவ்வூருக்கு அருகில் உள்ள தலைஞாயிறு சர்க்கரை ஆலைக்கு, கரும்பு ஏற்றிச் செல்லும் டிராக்டர்கள் மற்றும் லாரிகள் தேங்கி நின்று போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்துவதனால் அடிக்கடி விபத்துகள் நடந்து உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. இதன்*

[திரு. நா. சந்திரமோகன்] [2005 ஏப்ரல் 13

அவசர அவசியம் கருதி, நடப்பு நிதியாண்டில் வைத்தீஸ்வரன் கோயிலில், ஒரு புறவழிச் சாலை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்தீஸ்வரன் கோயிலினுடைய புறவழிச் சாலையின் அவசியம் பற்றி இங்கு விரிவாக எடுத்துக் கூறினார்கள். வரும் காலங்களில் மாண்புமிகு அம்மா அவர்களினுடைய ஆணையினைப் பெற்று முன்னுரிமை அடிப்படையில் இப்பணியை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஆ) புதுக்கோட்டை இளங்குற்றவாளிகள் சிறைப் பள்ளியை மாவட்டச் சிறைச்சாலையாக மாற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த அடுத்த கவன ஈர்ப்பு. டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டையில் உள்ள இளங்குற்றவாளிகள் சிறைப் பள்ளியை மாவட்டச் சிறைச்சாலையாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அறிக்கை

தற்போதைய புதுக்கோட்டையில் உள்ள இளங்குற்றவாளிகள் சிறைப் பள்ளியின் மொத்த நிலப் பரப்பளவு 23.45 ஏக்கர் ஆகும். இதில் பிரதான சிறை 2.96 ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ளது. மேலும் இவ்வளாகத்தில் 40 சிறைவாசிகளை அடைப்பாகக் கொண்ட கிளைச்